**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்**
**பெண்கள் தொழில்முனைவு பற்றிய சர்வதேச மாநாட்டில் ஆற்றிய உரை**
**டிசம்பர் 3, 2019**

**தூதுவர் டெப்லிட்ஸ்:** மேன்மை தங்கிய விருந்தினர்கள் மற்றும் மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர்களுக்கு காலை வணக்கம். இந்நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், காலத்துக்கு அவசியமான நிகழ்வுக்கு அழைத்தமைக்காக கொழும்பு வர்த்தக மற்றும் முகாமைத்துவ பாடசாலை மற்றும் பெண்களின் சர்வதேச அறக்கட்டளை ஆகியவற்றுக்கு நன்றி கூற விரும்புகின்றேன்.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் இலங்கை மக்களுக்கு வாழ்த்துச் செய்தியையும் புதிய ஜனாதிபதியுடன் இணைந்து முன்னோக்கி செயற்பட எதிர்பார்த்திருப்பதாகவும் எனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தேன். பரஸ்பரம் நன்மையளிக்கும் உறவுகளைத் தொடர்ந்து முன்னெடுப்பதில் ஆர்வமாக உள்ளதாக ஜனாதிபதி அதற்குப் பதிலிட்டிருந்தார். இருதரப்பு பொருளாதாரம் மற்றும் உள்நோக்கிய முதலீடுகளை அதிகரிக்கக் கூடிய வர்த்தகத் தொடர்புகள் என்பன தொடர்பில் எமது உறவுகளில் கவனம் செலுத்தப்படும். இது தொடர்பில் தொழில்முனைவோருக்கு மிகவும் முக்கியமான பங்கு உள்ளது. பகிரப்பட்ட செழிப்பு எனது நாட்டுக்கும் உங்கள் நாட்டுக்கும் மிகவும் முக்கியமானது என்பதுடன், இது அனைவருக்கும் பயனளிக்கும் விடயமாகும். இலங்கையின் முன்னேற்றத்திற்கு ஆதரவாகவும் அங்கமொன்றாகவும் அமெரிக்காவினால் இருக்க முடியும் என்பது எனக்கு தெரியும்.

இலங்கையின் முன்னணி ஏற்றுமதிச் சந்தையாக அமெரிக்கா விளங்குவதுடன், இலங்கையில் அதிகமான முதலீடுகளை மேற்கொண்டுள்ள பாரிய கம்பனிகளில் அமெரிக்க கம்பனிகளே காணப்படுகின்றன. அமெரிக்க வர்த்தகங்கள் நாட்டுக்குள் வேலைவாய்ப்புக்கள், திறன், புதிய தொழில்நுட்பம் மற்றும் வர்த்தக சூழலுக்கான உயர்ந்த நெறிமுறை மற்றும் பணியிடத் தரங்களைக் கொண்டுவருகின்றன. இலங்கையின் எதிர்காலத்தைப் பாதுகாக்க நிலைபேறான மற்றும் நியாயமான பொருளாதார அபிவிருத்தி முக்கியமானதாகும். முதலீடு, பரஸ்பர வர்த்தகம் மற்றும் பணியிட முன்னேற்றம் என்பன உயர்ந்த வளர்ச்சியைப் பெறுவதற்கான உண்மையான வாய்ப்புக்களை உருவாக்கும்.

எனினும், விஸ்தரிக்கப்பட்ட பங்காண்மைகள், சீரான கட்டுப்படுத்தல் கொள்கை, ஸ்திரமான அரசியல் மற்றும் சட்டத்தின் ஆட்சி என்பனவற்றிலேயே வளர்ச்சி அதிகரித்துச் செல்லும் வீதம் தங்கியுள்ளது. இந்தப் பண்புகள் - பங்காண்மை, கட்டுப்படுத்தல் கொள்கை, சீரான தன்மை, அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆட்சி - இலங்கையின் போட்டித் தன்மையையும் அதிகரிக்கச் செய்யும்.

போட்டித் தன்மைக்காக கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் இவை மாத்திரமல்ல. அனைத்து நாடுகளும் தமது பொருளாதாரம் பற்றித் தீர்மானம் எடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய மற்றுமொரு விடயம் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பை விஸ்தரிப்பதாகும். பெண்கள் பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டதொன்றாகும். எனினும், இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் இவர்களின் பங்களிப்புக்களில் இன்னமும் தடைகள் காணப்படுகின்றன. இவ்வாறான சில தடைகள் பற்றிக் கலந்துரையாடுவது இந்த மாநாட்டின் ஒரு பகுதியாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். அத்துடன் இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும் என்பதிலும் உடன்படுகின்றேன்.

இந்த மாற்றமானது தேசிய பொருளாதார பாதுகாப்புக்கான விடயங்களுக்கான மாற்றமாக அமைய வேண்டும். சமூக சமத்துவத்துக்கான மாற்றமாக அமைய வேண்டும். அத்துடன் சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் என்பவற்றுக்கு முன்னோடியாகவும் அந்த மாற்றங்கள் அமைய வேண்டும். பொருளாதாரத்தில் பெண்களை உள்ளடக்குவதில் காணப்படும் தடைகளைப் பெயரிடுவதானது, அத்தடைகளை நீக்குவதற்கு எமக்கு உதவியாகவிருக்கும். இந்தத் தடைகள் சமூகக் காரணிகள், மோசமான கொள்கைகள், காலங்கடந்த சட்டங்கள் மற்றும் வெளிப்படையான பாலியல் துன்புறுத்தல்கள், வேறுபடுத்தல்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளன. வேலைத்தளங்கள் மற்றும் பணியிடங்களுக்குச் செல்லும் வழிகளில் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும்

வேற்றுமைகள் இடம்பெறுகின்றன – கொழும்பின் பொதுப் போக்குவரத்து முறையின் ஒரு விடயமாகும் - இந்த துன்புறுத்தல்கள் மற்றும் வேற்றுமைகள் என்பன பெண்களைத் தடுப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் பாதிக்கின்றன.

இந்தத் தடைகள் ஒவ்வொன்று பற்றியும் விரிவாக என்னால் பேசமுடியுமாக இருக்கின்றபோதும், இன்றையதினம் உங்கள் முன்னிலையில் பேசுவதற்கான நேரம் வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, ஒரு சில தடைகள் பற்றி மாத்திரம் விரிவாகப் பேசுவதற்கு இந்த மேடையை நான் பயன்படுத்த விரும்புகின்றேன். குறிப்பாக பல்வேறு விடயங்களுக்கு காரணமாக இருக்கின்ற ஒரு தடையை பற்றிப் பேச விரும்புகின்றேன்.

பிரச்சினையைப் பற்றி மாத்திரம் நான் உங்களுக்கு விரிவுரை நடத்த விரும்பவில்லை. அதற்கான சில தீர்வுகள் பற்றியும் பேசுவதற்கு எத்தனிக்கின்றேன். எனவேதான் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்புக்கு காணப்படும் தடைகள் பற்றிய கண்காணிப்புக்களை உங்களுடன் பகிர்ந்துகொண்டு, தனிப்பட்ட ரீதியாகவும் நிறுவனங்களின் தலைமைத்தும் ஊடாகவும் அவற்றை எதிர்கொண்டு தடைகளை நீக்க முடியும்.

பணியிடங்களில் பெண்களுக்கு எதிரான தன்னுணர்வற்ற பக்கச்சார்பான தன்மையே இந்தத் தடையாகும். அண்மையில் ‘மைன்ட் டூல்’ வலைத்தளத்தில் நான் வாசித்த ஆய்வுக்கட்டுரையில், நமது பார்வைக்கு அமைய மக்களை தானாவே வகைப்படுத்துவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. நாம் வயது, தலைமுடியின் நிறம், தோலின் நிறம், ஒருவருடைய உடல் எடை மற்றும் அவர்களின் பாலினம் என்பவற்றை பார்க்கின்றோம். அது மாத்திரமன்றி நாம் இலகுவில் பார்க்க முடியாத விடயங்களை வைத்துக்கொண்டும் நாம் மக்களை வகைப்படுத்துகின்றோம். கல்வி, மாற்றுத்திறன், சமூக அந்தஸ்து, பாலினம் அல்லது வேலை என்பவற்றையும் அடிப்படையாகப் பார்க்கின்றோம். மக்களை இவ்வாறு தனியான குழுக்களில் வைப்பதற்காக நாம் சில பண்புக்கூறுகளை வைக்கின்றோம். ஒருவரின் வேலைக்கும் அவர் பற்றி நாம் கொண்டிருக்கும் நிலைப்பாட்டுக்கும் இடையில் தொடர்பு இருக்கிறதா இல்லையா என்பது கூடத் தெரியாது நாம் கண் சிமிட்டும் நேரத்தில் ஒருவர் பற்றி எண்ணப்பாட்டை ஏற்படுத்தி விடுகின்றோம்.

தன்னிலையற்ற நிலையில் காண்பிக்கும் ஒருதலைப்பட்சத் தன்மையானது மனோரீதியில் ஒரேமாதிரியான நிலைப்பாடாகும். இது பெண்களால் எதனைச் செய்ய முடியும் எதனைச் செய்ய முடியாது என்பது குறித்த நிலைப்பாடொன்றுக்கு வரமுடியாது. அல்லது அவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதைக் கணிக்க முடியாது.

சுயநினைவிழந்த ஒருபக்கச் சார்பானது பணியாளர் தொகுதியில் பெண்களின் பங்களிப்புக்கு வெளிப்படையான தடையாக இருக்கிறது. ஏனெனில், இது எமது நடத்தை மற்றும் நம்பிக்கையுடன் ஆழமாக இணைந்துள்ளது. நாம் வளர்ந்துவரும் சமூகமயப்படுத்தப்பட்ட நெறிமுறைகளிலிருந்து இது வெளிப்படுகிறது.

இதில் முக்கிய விடயம் சுயநினைவிழந்த நிலைமையாகும். நாம் இதனைப் புரிந்துகொள்ளும் நிலையில் இல்லை. நாம் பக்கச்சார்புத்தன்மையை வெளிப்படுத்தும்போது பொதுவாக நாம் அதனை உணர்ந்துகொள்ளக்கூட மாட்டோம் என்பதால் குறிப்பாக இதனை ஒழிப்பது மிகவும் கடினமானதாக இருக்கும்.

அதேநேரம் மோசமான சட்டம் மற்றும் கொள்கைகள் இதற்குத் தெளிவானவை. எனினும், வெளிப்படையான சட்டவாக்கச் செயற்பாடுகள் மூலம் இந்த நிலைமைய மாற்ற முடியும். சுயநினைவிழந்த நிலையிலான பக்கச்சார்பு தன்மையை கடைப்பிடிப்பவர்கள் தாம் தவறு இழைக்கின்றோம் என்பதை முற்றாகத் தெரிந்துகொள்ளதாவர்களாக இருப்பர்.

சுயநினைவிழந்த நிலையிலான பக்கச்சார்புத் தன்மை பல்வேறு வடிவங்களில் உள்ளது.

செயல்திறன் அடிப்படையிலான பக்கச்சார்புத் தன்மை என ஒரு விடயம் உள்ளது. பெண்களின் செயல்திறனை குறைவாகவும் ஆண்களின் செயல்திறனை அதிகமாகவும் மதிப்பிடும்

பக்கச்சார்பான நிலைப்பாடாகும். ஆண்கள் பெண்கள் என்ற பாலின வித்தியாசத்தினால் இவ்வாறு பக்கச்சார்பாக சிந்திக்கின்றோம்.

பண்புக்கூற்று பக்கச்சார்புத் தன்மையொன்றும் ஒரு விடயம் உள்ளது. அதாவது ஏதாவது ஒரு வெற்றிக்கு ஆண்கள் அதிகமாகப் பாராட்டப்படுவதும், தோல்வியொன்றுக்கு பெண்கள் அதிகம் பழிசுமத்தப்படுவதுமாகும்.

இதில் மிகவும் அறியப்பட்ட மற்றுமொறு பக்கச்சார்புத் தன்மை, மனோரீதியான பக்கச்சார்புத் தன்மையாகும். அதாவது தமது பணி தொடர்பில் பெண்கள் குறைந்த அர்ப்பணிப்பைக் காண்பிக்கின்றனர், ஆண்கள் அதிக அர்ப்பணிப்பைக் காண்பிக்கின்றனர் என்ற பிழையான அனுமானத்தினால் ஏற்படுவதாகும். குறிப்பாக பிள்ளைகள் இருக்கும்போது அவ்வாறான எண்ணப்பாடு ஏற்படும்.

உறுதிப்படுத்தப்பட்ட பக்கச்சார்புத் தன்மையென்பது, சுயநினைவிழந்த நிலையில் ஆட்களைத் தெரிவுசெய்யும்போது எமது பண்புகள் மற்றும் சமூக அந்தஸ்து பாடசாலைக் குழு அல்லது உங்கள் சமூகக்குழு என்பவற்றின் செயற்பாடுகளே குறித்த தொழிலுக்குப் பொருத்தமானது என்பதை நமக்கு நாமே தீர்மானித்துக் கொள்வதாகும்.

இந்த பக்கச்சார்பான தன்மைக்கு ஆண்கள் மாத்திரம் பாத்திரமானவர்கள் அல்ல. சுயநினைவிழந்த பக்கச்சார்புத் தன்மைக்கு பெண்களும் சில சந்தர்ப்பங்களில் குற்றவாளிகளாகின்றனர்.

கட்டுமாணப் பணி அல்லது பொறியியல் என்பன ஆண்களுக்கு உரித்தான வேலைகள் என நினைத்து அவை தொடர்பான பணிகளுக்கு ஒருபோதும் விண்ணப்பிக்காத எத்தனை பெண்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும்? ஏன் பெண்கள் அவ்வாறு சில குறிப்பிட்ட துறைகள் பற்றி சிந்திக்கின்றார்கள் என உங்களில் யாருக்காவது தெரியுமா?

பெண்களுக்கு உரிய துறைகள் அல்லது அவர்களுக்கே உரிய பணிகள் என சிலவற்றை தீர்மானித்து அதற்குள் தம்மை மட்டுப்படுத்திக் கொள்கின்றனர். ஆண்களின் தலைமைத்துவம் எப்பொழுதும் சிறப்பாக இருக்கும் எனக் கருதி தமக்குள் இருக்கும் போட்டித்தன்மையை அவர்களே அவமரியாதை செய்துகொள்கின்றனர்.

பணியிட விடயத்தில் இதுபோன்ற பக்கச்சார்புத் தன்மை பேச்சுக்குரியதாகும். இது தனிப்பட்ட பணியாளர்களுக்குள் மாத்திரமன்றி அல்லது தனிப்பட்ட வர்த்தகமொன்றுக்குள் அடங்கிவிடுவதில்லை. இந்தப் பக்கச்சார்பான தன்மையால் ஏற்படுகின்ற ஒன்றிணைந்த தாக்கம் எதிர்மறையானது. இது ஒட்டுமொத்த பணியாளர் தொகுதியின் பங்களிப்பையும் பாதிப்பதுடன், உலகம் முழுவதிலுமுள்ள பெண்களின் உற்பத்தித்திறனையும் பாதிக்கும்.

உலக வங்கயின் அறிக்கைக்கு அமைய இலங்கையில் உள்ள பெண்கள் பணியாளர் தொகுதியில் 35 சதவீத பங்கைக் கொண்டுள்ளனர். பிராந்தியம் மற்றும் உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. பெண்களின் பங்களிப்பு உலகத்தில் சராசரியாக 47 சதவீதமாகும். சில நாடுகளில் இதனைவிட அதிகமான சராசரி காணப்படுகிறது. ஜப்பானில் 51 சதவீதம், அமெரிக்காவில் 56 சதவீதம், சிங்கப்பூரில் 60 சதவீதம், நேபாளத்தில் 82 சதவீதம் என வேறுபட்ட எண்ணிக்கை காணப்படுகின்றன. கடந்த தசாப்தங்களில் பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை வீழ்ச்சி என்பன காணப்பட்டபோதும் இந்நிலைமை தொடர்கிறது.

சுயநினைவிழந்த நிலையிலான பக்கச்சார்புத் தன்மை எங்கு காணப்பட்டாலும் அதனை நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுப்பதன் ஊடாக பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க முடியும். பெண்களின் திறமைகள் குறித்து பாரபட்சமற்ற முறையில் பெண்களின் திறமைகளை மதிப்பீடு செய்கின்றீர்களா அல்லது பணியிடத்தில் அவர்களின் தேவைகளை சரியான மதிப்பீடு செய்கின்றீர்களா என்பதை உங்களை நீங்களும் மற்றையவர்களையும் கேள்விக்கு உட்படுத்துங்கள்.

ஏனையவர்கள் பற்றிய எமது எண்ணப்பாட்டை சரிசெய்வது இலகுவானது அல்ல. மற்றையவர் பற்றிய அனுமானத்தை ஏற்படுத்துவது எம்மிடமிருந்தே மாற்றப்பட வேண்டும்.

பெண்கள் பேசும்போது நீங்கள் இடையில் நிறுத்துவீர்களா, எனினும் குழுவொன்றில் அல்லது கலந்துரையாடலொன்றில் ஆண்கள் பேசும்போது அவர்கள் முடிக்கும்வரை அனுமதிப்பீர்களா? ஆண்கள் வேலை நேரத்தின் பின்னரும் பணியாற்றுவர் பெண்கள் அவ்வாறு இல்லையென நீங்கள் அனுமானிக்கின்றீர்களா? பெண்களால் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகளை ஆண் சகபாடிகள் மீண்டும் முன்வைக்கும்போது அவற்றை நீங்கள் பாராட்டுகின்றீர்களா? பெண்களை ‘கேர்ல்ஸ்’ என்று அழைக்கின்றபோதும், அதே இடத்தில் பணியாற்றும் ஆண்களை ‘போய்ஸ்’ என்று அழைக்கின்றீர்களா? இவையே சுயநினைவற்ற நிலையிலான பக்கச்சார்புத் தன்மைக்கான உதாரணங்களாகும். நாம் அனைவரும் இதனைச் செய்கின்றோம் என நான் சந்தேகிக்கின்றேன்.

எமது சொந்த நடத்தைகள் மற்றும் பணியிடத்தின் நடத்தைகளை கேள்விக்கு உட்படுத்துவதன் ஊடாக இந்தப் பக்கச்சார்பு தன்மைகளை நீக்க முடியும்.

கல்வியின் தரம், துன்புறுத்தல்கள் போன்ற சமூக விடயங்கள், சிறுவர்கள் பராமரிப்பில் குறைபாடு மற்றும் வேலைக்கமர்த்துவதில் பக்கச்சார்புத் தன்மை பேன்றன இலங்கையின் பொருளாதாரத்தில் பெண்களின் குறைவாகன பங்களிப்புக்கு காரணமாகின்றன. இவற்றுடன் சுயநினைவிழந்த பக்கச்சார்புத் தன்மையும் இணைந்து பெண்களுக்கு இங்கும் உலகெங்கிலும் காணப்படும் பொருளாதார வாய்ப்புக்களுக்குத் தடைகளாக இருக்கின்றன. இதன் பலனாக பல பெண்கள் மிகவும் குறைந்த வருமானத்துக்கு முறைசாரா துறைகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளதுடன், அவர்களுக்கு ஆபத்துக்கள் காணப்படுவதுடன், தொழிலாளர் உரிமைகள் மற்றும் நன்மைகள் குறைவாகக் கிடைக்கின்றன. இலங்கையில் மாத்திரம் இவ்வாறான நிலைமை காணப்படுவதில்லை.

பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்புத் தொடர்பில் காணப்படுத் தடைகளை நிவர்த்தி செய்வதில் உள்ளூரில் தீர்வுகள் காணப்பட்டாலும் அது உலகளாயவியரீதியில் நீடித்துவரும் பிரச்சினையாகும். இவற்றிலும் அதிகமான தனிப்பட்ட தீர்வுகள் காணப்படுகின்றன.

உலகப் பொருளாதார மாநாட்டுக்கு அமைய, பாலினங்களுக்கிடையிலான வித்தியாசம் அதிகரித்து வருவதுடன், இது உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 35 சதவீதமாகும். இதில் முழுமையாக 20 சதவீதம் பன்முகப்படுத்தப்பட்ட பாலின உற்பத்தித் திறன் காரணமாக அதிகரித்துள்ளது. அதேநேரம் உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவில் 11 மில்லியன் பெண்கள் சொந்த வர்த்தகத்தைக் கொண்டிருப்பதுடன், அவர்களிடம் 9 மில்லியன் பணியாளர்கள் பணியாற்றுவதுடன், ட்ரில்லியன் டொலருக்கும் அதிகமான வருமானமும் ஈட்டப்படுகிறது. இலங்கையுடன் இதனை ஒப்பிடுகையில் பொருளாதாரத்தில் அவை எவ்வாறான பங்களிப்பைக் கொண்டுள்ளன, இலங்கையின் போட்டித்தன்மை எப்படி அமைந்துள்ளது என்பதை நினைத்து பாருங்கள்.

பெண்கள் பணியாற்றும்போது தமது வருமானத்தில் 90 சதவீதமானவற்றை தமது வர்த்தகத்திலும், குடும்பத்தின் சுகாதாரம் மற்றும் கல்வியிலும் மீண்டும் முதலிடுவார்கள். இது ஆண்களை விட அதிகமான தொகையாகும். பொருளாதாரத்தில் பெண்கள் முழுமையான சாத்தியத்தைப் பெற்றுக்கொள்வார்களாயின் அது பாலின இடைவெளியைக் குறைத்து, 2025ஆம் ஆண்டு உலகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 28 ட்ரில்லியன் டொலர்களாக அதிகரிக்க முடியும். இன்றிலிருந்து இன்னமும் ஐந்து வருடங்கள் மாத்திரமே உள்ளன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 28 ட்ரில்லியன் மேலதிகமாகும். இது அமெரிக்கா மற்றும் சீனாவின் பொருளாதாரங்களை ஒன்றிணைக்கும் பெறுமதிக்கு சமமானதாக இருக்கும். இதனால் பெருந்தொகையான பங்குகள் சகலரிடமும் பகிரப்பட்டிருக்கும்.

எனவே நாம் என்ன செய்யப்போகின்றோம்? எதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கின்றோம்? அரசாங்கம், வர்த்தகம் மற்றும் தொழில்முனைவோராக உள்ள துணிவுள்ள, தைரியமான பெண் மற்றும் ஆண்களினால் கடந்த வருடங்களில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

பெண்கள் ஒருவருக்கு ஒருவர் பாராட்டிக் கொள்வதற்கு இது சிறந்த தருணம் இல்லையென நான் கருதுகின்றேன். எமது பெண் பிள்ளைகளுக்கு காணப்படும் தடைகளை விலக்கி, அடுத்த சந்ததியினர் சிறந்த சூழலை முகங்கொடுப்பதற்கான பாதை சிறப்பாக இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இதில் முக்கியமான பங்களிப்பைச் செலுத்தவேண்டிய பொறுப்பு ஆண்களுக்கும் உள்ளது. கனவான்களே நான் உங்களிடம் கேட்கின்றேன், உங்கள் வர்த்தகத்தில் அல்லது உங்கள் நிறுவனத்தில் பணிப்பாளர் சபையில் அல்லது முக்கியமான பதவியில் பெண்கள் இருந்து தலைமைத்துவம் வகிக்கின்றார்களா? அவர்கள் முக்கியமான தீர்மானம் எடுக்கும் விடயங்களில் பங்கெடுக்கின்றார்களா? உங்கள் நிறுவனத்தில் உள்ள பெண்கள் முழுமையான ஆற்றலை வெளிப்படுத்த தவறியதாக பக்கச்சார்பான முறையில் இறுக்கப்படுகின்றார்களா?

எதிர்காலத்தை வடிவமைப்பதற்கான பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது. இன்று இங்குள்ள அனைவரும் பெண்களை வலுப்படுத்த, ஊக்குவிக்க, ஒத்துழைப்பு வழங்க முடியும். எம்மைச் சுற்றியுள்ள சுயநினைவிழந்த பக்கச்சார்புத் தன்மையை அடையாளம் காணமுடியும். அதனை அடையாளம் கண்டால் நிவர்த்தி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க முடியும். பக்கச்சார்புத் தன்மையை பெயரிட்டு, குறிப்பிட்ட நோக்கத்துக்காக அதனை வெளிப்படுத்தினால் அதிகாரத்தை மாற்ற முடியும். அமெரிக்கத் தூதரகத்தில் உள்ள பல இலங்கையர்களுக்கு தொழில்வழங்குனர் மற்றும் அபிவிருத்திப் பங்காளர் என்ற ரீதியில் இந்த விடயத்தில் கவனம் செலுத்துமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

இளைஞர், யுவதிகளின் தொழில்வாய்ப்புக்களை அதிகரிக்கும் நோக்கில் வடிவமைக்கப்பட்டு தற்பொழுது முன்னெடுக்கப்படும் திறன் அபிவிருத்தி, தொழில்முனைவோருக்கான பயிற்சித் திட்டங்களுக்கு அமெரிக்கா உதவி வருகிறது. குறிப்பாக அதிகம் வளர்ச்சியடைந்துவரும் சுற்றுலாத்துறை மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் உள்ள யுவதிகளுக்கு உதவிகள் முன்னெடுக்கப்படுகின்றன. உதாரணமாக, யூஎஸ்எயிட் நிறுவனத்தின் இளைஞர் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்முனைவோர் செயற்றிட்டமான 'யூலீட்' திட்டத்தின் மூலம், ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் உள்ள 53 அரச மேல்நிலை பாடசாலைகளில் பணியாற்றும் 70 தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு இரண்டு செயலமர்வுகள் நடத்தப்பட்டன. அதிகரித்துவரும் தகவல் தொழில்நுட்ப வேலைவாய்ப்புக்கள், வாழ்க்கையின் எதிர்காலத்துக்கு எவ்வாறு நீடித்து நிலைக்கக் கூடிய தகவல் தொழில்நுட்பததை தெரிவுசெய்வது, தகவல் தொழில்நுட்பத்தினால் உயர் கல்விக்கு காணப்படும் முக்கியத்துவம், தகவல் தொழில்நுட்பத் துறையில் யுவதிகளுடன் எவ்வாறு இணைந்து பணியாற்றுவது போன்ற விடயங்கள் பங்குபற்றியவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன.

பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருப்பதற்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தீர்வாக அமையாது. பெண்களை வலுவூட்டுவதற்கான சூழல் உருவாக்கப்படுவதுடன், தொழில்ரீதியான வளர்ச்சிக்கு இடமளிக்கப்பட வேண்டும். இதனைச் செய்வதற்கு பெண்களை பின்னால் இழுத்துவைத்திருக்கும் தடைகள் நீக்கப்பட வேண்டும். இது பொருளாதார பாதுகாப்பு மற்றும் சமத்துவத்தின் விடயங்களாகும். இது உலக போட்டித்தன்மை மற்றும் எவரும் தனித்துவிடப்படாது உள்ளடக்கப்பட்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இந்த மாநாட்டில் உரையாற்ற வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றிகளைக் கூறிக் கொள்வதுடன், எதிர்வரும் நாட்கள் சிறப்பாக அமைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

நன்றி!

\# # # #